**செய்தி வெளியீடு எண்: 38/2026** **நாள்: 14.05.2026**

**பத்திரிகைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில் பயணிகளின் வசதிக்காக கூடுதலாக 55 நகரும் படிக்கட்டுகள் திறப்பு**

பயணிகளின் தேவை மற்றும் வசதியை மேம்படுத்தும் நோக்கில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் கட்டம் 1 மற்றும் அதன் விரிவாக்க வழித்தடத்தில் உள்ள 27 மெட்ரோ இரயில் நிலையங்களில், பயணிகளின் எண்ணிக்கை மற்றும் தேவையை கருத்தில் கொண்டு, 'C1 & 2 ESC' திட்டத்தின் கீழ் புதிதாக 55 நகரும் படிக்கட்டுகள் (Escalators) நிறுவப்பட்டுள்ளன. இந்த கூடுதல் வசதியின் மூலம், கட்டம் 1 மெட்ரோ இரயில் நிலையங்களில் ஏற்கனவே இருந்த 226 நகரும் படிக்கட்டுகளுடன், புதிதாக நிறுவப்பட்டுள்ள 55 நகரும் படிக்கட்டுகளும் சேர்த்து நகரும் படிக்கட்டுகளின் எண்ணிக்கை தற்போது 281 ஆக உயர்ந்துள்ளது.

குறிப்பாக, திருமங்கலம் மற்றும் அண்ணா நகர் கிழக்கு மெட்ரோ இரயில் நிலையங்களில் தலா 5 நகரும் படிக்கட்டுகளும், வடபழனி மெட்ரோ இரயில் நிலையத்தில் 4 நகரும் படிக்கட்டுகளும், ஆயிரம் விளக்கு, அண்ணா நகர் கோபுரம் மற்றும் அரசினர் தோட்டம் ஆகிய மெட்ரோ இரயில் நிலையங்களில் தலா 3 நகரும் படிக்கட்டுகளும், ஏஜி-டிஎம்எஸ், ஈக்காட்டுதாங்கல், கிண்டி, தியாகராஜா கல்லூரி, விம்கோநகர் பணிமனை, சென்ட்ரல், வண்ணாரப்பேட்டை, எல்ஐசி, நேரு பூங்கா, விமான நிலையம், அசோக் நகர், எழும்பூர், நந்தனம் ஆகிய மெட்ரோ இரயில் நிலையங்களில் தலா 2 நகரும் படிக்கட்டுகளும், பரங்கிமலை, சின்னமலை, உயர்நீதிமன்றம், மண்ணடி, தேனாம்பேட்டை, தண்டடையார்பேட்டை ஆகிய மெட்ரோ இரயில் நிலையங்களில் தலா 1 நகரும் படிக்கட்டுகளும் கூடுதலாக நிறுவப்பட்டுள்ளன.

இந்த கூடுதல் வசதியினை, மெட்ரோ இரயில் பயணி ஒருவர் திறந்து வைத்தனர். இந்நிகழ்வில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் திரு. மனோஜ் கோயல், (அமைப்புகள் மற்றும் இயக்கம்), தலைமை ஆலோசகர் திரு. கோபிநாத் மல்யா (இயக்கம் மற்றும் பராமரிப்பு), பொது மேலாளர் திரு. எஸ். சதீஷ் பிரபு (இயக்கம் மற்றும் பராமரிப்பு), சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நகரும் படிக்கட்டுகளை நிறுவிச் செயல்படுத்தும் பணி பெரும் சவாலாக இருந்தது. ஏனெனில், மெட்ரோ இரயில் சேவைகள் இல்லாத நேரங்களிலேயே (non-revenue hours) இப்பணிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது; அதே சமயம், தற்போதுள்ள வசதிகளைப் பயணிகள் பயன்படுத்துவதில் எந்தவித இடையூறும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வதும் அவசியமாக இருந்தது. சென்னை மாநகரத்திற்கு உலகத்தரம் வாய்ந்த பொதுப் போக்குவரத்து அமைப்பை வழங்க வேண்டும் என்ற சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இலக்கிற்கு ஏற்ப, அவர்களது அர்ப்பணிப்புள்ள பல்திறன் கொண்ட குழுவினர், இந்தப் புதிய இயந்திரங்களைச் சீரான முறையில் நிலையங்களில் ஒருங்கிணைத்து இந்தச் சவாலை வெற்றிகரமாக முடித்தனர்.

**வெளியீடு: கூடுதல் இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**